**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 228 of 2013**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : ஸ்ரீஹரி** | **Father/Husband's Name : கனகராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 19.05.2026.**

**A2, A3 present. A1 absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது உடுமலைபேட்டையில் குடியிருந்து வீட்டில் இருந்து வருகிறேன். நான் கடந்த 2012ம் வருடம் ஸ்ரீஸ்ரீ வத்சா என்ற பேப்பர் மில் வைத்து தொழில் செய்து வந்தேன். அப்போது என்னிடம் பட்டியல் சாட்சி 1 பத்மநாபன் Manager ஆக பணிபுரிந்து வந்தார். கடந்த 05.10.2012ம் தேதி மதியம் 2.30 மணியளவில் முகமது அலி, பாலமுருகன், ரத்னசாமி ஆகியோர் எனது மில்லுக்கு முன்னால் இருந்த கேட்டுக்கு அருகே கார் நான்கு சக்கரவாகனத்தை நிறுத்தி கெட்ட வார்த்தையால் Securityயை பார்த்து அசிங்கமான கெட்ட வார்த்தைகளை மேற்படி மூவரும் கூறினார்கள். பின்னர் மேற்படி மில்லில் வேலை பார்த்த Securityயிடம் மில்லில் இருந்து தனக்கு வர வேண்டிய பணம் அவர்கள் கொண்டு வந்த காரை ஏற்றி கொன்றுவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள். முகமது அலி, பாலமுருகன், ரத்னசாமி ஆகியோர் எனது மில்லில் Waste Paper Supply செய்து வந்தார்கள். நான் அந்த சரக்குகளுக்கு பணம் கொடுத்துவிட்டேன். ஆனால் பணம் தரவில்லை என்று ரகளை செய்தார்கள். அதற்கு பிறகு அதை கேள்விபட்டு பத்மநாபன் Securityயிடம் விபரங்கள் கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 2017ம் வருடம் மேற்படி மில் திவாலாகிவிட்டதால் வேறு நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி பத்மநாபன் தற்போது எங்கு வேலை செய்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பத்மநாபன் எங்கள் மில்லில் வேலை செய்தபோது சென்னையை சொந்த ஊராக கொண்டவர். எதிரி முகமது அலியை பார்த்தால் அடையாளம் தெரியும். ஆஜர் எதிரி**

பாலமுருகனை எனக்கு தெரியும். ரத்னசாமி என்ற எங்கள் கம்பெனிக்கு வந்த நபர் ஆஜர் எதிரி இல்லை. தற்போது நிற்கும் எதிரி ரத்னசாமியை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள பத்மநாபன் என்பவரின் கையொப்பம் என்னிடம் வேலை பார்த்த பட்டியல் சாட்சி 1 பத்மநாபன் என்பவருடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. பத்மநாபன் என்பவர் சம்பவம் நடந்த காலத்தில் எனது நிறுவனத்தில் எனக்கு கீழே Managerஆக இருந்தார் என்றால் சரிதான். நடந்ததாக சொல்லும் சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், Securityயும், பத்மநாபனும் சொல்லி தெரியும். பத்மநாபன் எனக்கு சொன்னதன் அடிப்படையில் தான் நான் போலிஸ் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றாலும் தற்போது முதல் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றாலும் முதல் விசாரணை சாட்சியம் அளித்தேன் என்றாலும் சரிதான். பத்மநாபன் உண்மையான தகவல்களை சொல்லாமல் பத்மநாபனுக்கு சாதகமான தகவல்களை சொல்லி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:59:13 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.